# <u>குளச்சல் நகராட்சி</u>

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் நவம்பர் திங்கள் 30—ம் நாள் வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற்றது.

முன்னிலை : திரு.ஜே. ஜேசையா, பி.எஸ்ஸி.,டி.பி.எம்.,
நகராட்சி மன்றத் தலைவர்.

## <u>பொருள்கள்</u>

**<u>இரங்கல் தீர்மானம்:</u>**

அண்மையில் காலம் சென்ற முன்னாள் நகராட்சி மன்ற உறுப்பினர்களான திரு. எம். மாலிக் முகம்மது B.Com., மற்றும் திரு. எம். அகமது செரீப் ஆகியோர் மறைவிற்கு இம்மன்றம் இரங்கல் தெரிவித்து தீர்மானிக்கிறது.

**<u>பொருள் எண்:1</u>**

<u>குளச்சல் நகராட்சிமன்றத் தலைவர் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்:</u>
குளச்சல் நகருக்கு மீன்பிடி துறைமுகம் கேட்டு கடந்த சுமார் 50 ஆண்டுகளாக குளச்சல் நகர மக்கள் ஒன்றுபட்டு ஓரணியில் திரண்டு ஜனநாயக ரீதியில் பல்வேறு இயக்கங்களை நடத்தி வந்துள்ளார்கள். குளச்சல் நகர மக்களின் நீண்ட கால கோரிக்கையை ஏற்று குளச்சல் மீன்பிடி துறைமுகத்திற்கான அறிவிப்பை வெளியிட்டும், நிதி ஒதுக்கீடு செய்தும் அரசாணை வெளியிட்டுள்ள முத்தமிழ் அறிஞர் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து குளச்சல் நகராட்சி மன்றம் தீர்மானிக்கிறது.

**தீர்மானம் எண். 1 – ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்:2</u>**

<u>குளச்சல் நகராட்சிமன்றத் தலைவர் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்:</u>
குளச்சலில் வர்த்தக துறைமுகம் அமைந்திட வேண்டும் என்பதற்காக கடந்த சுமார் 50 ஆண்டுகளாக மாவட்டம் தழுவிய ஜனநாயக ரீதியிலான பல்வேறு இயக்கங்களை குமரி மாவட்ட மக்கள் நடத்தி வந்துள்ளார்கள். கடந்த 04.11.2006 அன்று தமிழகம் வந்த பாரத பிரதமர் மாண்புமிகு மன்மோகன்சிங் அவர்களிடம் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் சர்வதேச தரத்தினாலான சரக்குப் பெட்டக வசதியுடன் கூடிய வர்த்தக துறைமுகத்தை குளச்சல் நகரில் அமைத்திட வேண்டும் என்ற தனது நீண்ட கால உணர்வினை வெளிப்படுத்தியபோது பாரதப் பிரதமர் அவர்கள் தமிழக முதல்வர் அவர்களின் கோரிக்கையை ஏற்று குளச்சல் வர்த்தக துறைமுகத் திட்டத்தினை அமல்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளவிருப்பதாக உறுதியளித்துள்ளார்கள். பாரதப் பிரதமர் அவர்களுக்கும், தமிழக முதல்வர் அவர்களுக்கும் குள்ச்சல் நகராட்சி மன்றம் நன்றி தெரிவித்து தீர்மானிக்கிறது.

**தீர்மானம் எண். 2 – ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்:3</u>**

<u>குளச்சல் நகராட்சிமன்றத் தலைவர் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்:</u>

2004 டிசம்பர் திங்கள் 26 சுனாமி பேரழிவின் நிமித்தம் குளச்சல் நகர மக்கள் பலரும் இடம் பெயர்ந்து வாழ்ந்து வருகிறார்கள். தமிழக அரசின் முயற்சியால் பல்வேறு தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் நிதி உதவியின் மூலம் வீடு மற்றும் உடமைகளை இழந்த குளச்சல் நகர மக்களுக்கு நகர எல்லைக்குட்பட்ட பகுதியிலும், நகர எல்கையை ஒட்டியுள்ள பஞ்சாயத்துப் பகுதிகளிலும், வீடுகள் கட்டி கொடுக்கப்பட்டுள்ளன. குளச்சல் நகரின் மேற்கு எல்கையையொட்டியுள்ள ரீத்தாபுரம் சிறப்பு சிற்றூராட்சி பகுதிக்குட்பட்ட தமிழக அரசிற்கு சொந்தமான உப்பளம் பகுதியில் குளச்சல் நகரில் தங்கள் மூதாதையர் காலந்தொட்டு தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வந்த ஆயிரக் கணக்கான மக்கள் சுமார் 300 வீடுகளில் குடியமர்த்தப்பட்டு இருக்கின்றார்கள். எனவே குளச்சல் நகர எல்கையையொட்டியுள்ள தமிழக அரசிற்கு சொந்தமான மேற்படி உப்பளம் பகுதியை குளச்சல் நகராட்சியோடு இணைத்திட தமிழக அரசைக் கேட்டு குளச்சல் நகராட்சி மன்றம் தீர்மானிக்கிறது.

**தீர்மானம் எண். 3 – ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்:4</u>**

<u>குளச்சல் நகராட்சிமன்றத் தலைவர் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்:</u>

2004 டிசம்பர் திங்கள் 26 சுனாமி பேரழிவின் நிமித்தம் குளச்சல் நகர மக்கள் பலரும் இடம் பெயர்ந்து வாழ்ந்து வருகிறார்கள். தமிழக அரசின் முயற்சியால் பல்வேறு தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் நிதி உதவியின் மூலம் வீடு மற்றும் உடமைகளை இழந்த குளச்சல் நகர மக்களுக்கு நகர எல்லைக்குட்பட்ட பகுதியிலும், நகர எல்கையை ஒட்டியுள்ள பஞ்சாயத்துப் பகுதிகளிலும், வீடுகள் கட்டி கொடுக்கப்பட்டுள்ளன. குளச்சல் நகரின் கிழக்கு எல்கையையொட்டி கல்லுக்கூட்டம் சிறப்பு சிற்றூராட்சிப் பகுதியில், குளச்சல் நகரில் தங்கள் மூதாதையர் காலந்தொட்டு தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வந்த ஆயிரக் கணக்கான மக்கள் சுமார் 200 வீடுகளில் குடியமர்த்தப்பட்டு இருக்கின்றார்கள். எனவே மேற்படி வீடுகள் கட்டப்பட்டுள்ள கல்லுக்கூட்டம் சிறப்பு சிற்றூராட்சிப் பகுதியை குளச்சல் நகராட்சியோடு இணைத்திட தமிழக அரசைக் கேட்டு குளச்சல் நகராட்சி மன்றம் தீர்மானிக்கிறது.

**தீர்மானம் எண். 4 – ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்:5</u>**

<u>குளச்சல் நகராட்சிமன்றத் தலைவர் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்:</u>

2004 –ல் ஏற்பட்ட சுனாமி பேரழிவில் இந்நகராட்சியின் 65% வார்டுகள் கடுமையாக பாதிக்கப்பட்டதால், பாதிக்கும் மேற்பட்ட கட்டிடங்கள் இடிந்து தரைமட்டமாகி பெருமளவில் உயிர்சேதமும், பொருட் சேதமும் ஏற்பட்டது. இதனால் வீட்டு வரியினை மட்டுமே நம்பியிருந்த இந்நகராட்சி கடுமையான வரி வருவாய் இழப்பினை சந்தித்து கொண்டிருக்கிறது. பொது நிதியில் போதிய வருவாய் இல்லாத காரணத்தால் பொதுமக்களுக்கு தேவையான அன்றாட அத்தியாவசிய பணிகளை செய்ய இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக மின்சார வாரியத்திற்கு 8/2005 முதல் 8/2006 முடிய ரூ. 40,08,242 /– செலுத்த இயலாத நிலை எற்பட்டுள்ளது. சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு தெருவிளக்கு, குடிநீர் வசதி, சுகாதார வசதி ஆகிய அடிப்படை வசதிகளை செய்வதற்கு கூட நிதி வசதி இல்லாத நிலையில் மிகுந்த நிதி நெருக்கடியில் நகராட்சி நிர்வாகம் தள்ளப்பட்டுள்ளதால் மேற்படி தொகை ரூ. 40,08,242 /– ஐ இந்நகராட்சிக்கு சுனாமி நிதி ஒதுக்கீட்டிலிருந்து மானியமாக தந்து உதவிட தமிழக அரசினை கேட்டு இம்மன்றம் தீர்மானிக்கிறது.

**தீர்மானம் எண். 5 – ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்: 6</u>**

<u>குளச்சல் நகராட்சிமன்றத் தலைவர் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்:</u>

குளச்சல் துறைமுகத்தெருவில் அமைந்துள்ள மீனவர் கூட்டுறவு சங்க கட்டிடம் கடந்த 2004 டிசம்பர் 26–ல் சுனாமி பேரழிவின் போது கடுமையாக பாதிக்கப்பட்டதின் காரணமாக எந்த நேரத்திலும் இடிந்து விழும் அபாய கட்டத்தில் உள்ளது. மேற்படி கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்தி சுனாமி நிதி ஒதுக்கீட்டிலிருந்து புதிய கட்டிடம் கட்டுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரையும், தமிழக அரசையும் கேட்டு மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண். 6 – ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்: 7</u>**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பொட்டல் பாலத்தன்கரை சாலையில் 2005–2006 ஆம் ஆண்டு சிறப்புச் சாலை திட்டத்தின்கீழ் ரூ. 4.60 லட்சம் மதிப்பீட்டில் நடைபெறும் சாலைப் பணியில் பொட்டல் முதல் குளச்சல் பிரதான சாலை வரை சாலையின் ஒரு ஓரம் கட்டப்பட்டுள்ள வடிகாலில் மழைநீர் வடியும் வகையில் கூடுதலாக ஒரு அடுக்கு மெட்டல் தளம் அமைக்குமாறும், மேலும் சாலையில் அரிப்பு ஏற்படாதவாறு தடுப்புச் சுவர் கட்டவும், சாலையின் மொத்த அகலத்திற்கும் தார்தளம் அமைக்கவும் நகராட்சி மன்றத் தலைவர் அவர்களுடன் கலந்தாலோசித்து முடிவெடுக்கப்பட்டது. அதன்பேரில் திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்பட்டதில் ரூ. 5.00 லட்சம் ஆகிறது. திருத்திய மதிப்பீடு ரூ. 5.00 லட்சத்திற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது. மேலும், காமராஜர் சாலைக்கு தார்தளம் அமைக்கும் பணிக்கு ரூ. 11.00 லட்சம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ரூ. 8.27 லட்சத்தில் வேலை முடிக்கப்பட்டுள்ளது. ஒரே திட்டத்தில் செய்யப்படும் வேலை என்பதால் மேற்படி வேலையில் மீதமுள்ள தொகையில் பாலத்தன்கரை சாலையில் மேற்கொள்ளப்படும் கூடுதல் இனஙகளுக்கு செலவாகும் ரூ. 40,000/– ஐ செலவினம் செய்ய மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**<u>அ.குறிப்பு :</u>** அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 7 – ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்: 8</u>**

குளச்சல் நகராட்சிப் பகுதியிலுள்ள அழகுவிளையில் 2005–2006 ஆம் ஆண்டு மாநில நிதிக்குழு திட்டத்தின்கீழ் சிமெண்ட் தளம் அமைக்கும் பணிக்கு ரூ. 1,35,000/– க்கு மதிப்பீடு தயார் செய்து ரூ. 79,900/–ல் அழகுவிளையில் சிமெண்ட் காங்கிரீட் தளம் அமைக்கப்பட்டு பணி முடிந்துள்ளது. இந்நிலையில் திட்டப் பணிகளை பார்வையிட சென்ற நகராட்சி மன்றத் தலைவர், துணைத் தலைவர் மற்றும் ஆணையர் ஆய்வு மேற்கொள்ளும் போது மேற்படி திட்டப்பணியில் மீதமுள்ள தொகை ரூ. 55,000/–க்கு அதே வார்டில் உள்ள திருவள்ளுவர் குறுக்குத் தெருவிற்கு சிமெண்ட் தளம் அமைக்கும் வேலையை எடுத்து நிதி முழுவதும் செலவிட அறிவுறுத்தப்பட்டது. அதன்பேரில் இவ்வேலைக்குரிய ஒப்பந்தக்காரர் திரு. ராதாகிருஷ்ணன் என்பவர் மூலம் ஏற்கனவே பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் பணியினை செய்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** : அவசர அவசியம் கருதி, மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதியின் பேரில் பணி மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 8 – அலுவலக குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்: 9</u>

குளச்சல் நகராட்சியில் உள்ள 24 வார்டுகளில் சேகரம் செய்யப்படும் குப்பைகள் யாவும் நகராட்சிக்கென உரக்கிடங்கு இல்லாததால் ஆடு, மாடு வதை செய்யும் இடத்தில் உள்ள காலியிடத்தில் கொட்டப்பட்டு வருகிறது. குப்பைகள் அதிக அளவில் மேற்படி இடத்தில் குவிக்கப்பட்டதால் லாரி மூலம் கொண்டு செல்லும் குப்பையை அங்கு கொட்ட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மிகுந்த சிரமத்திற்கிடையே மேற்படி குப்பைகள் கொட்டும் பணி நடந்து வருகிறது. இந்நிலையில் குவிக்கப்பட்டுள்ள குப்பைகளை அள்ளி வேறு இடத்தில் கொட்டுவதற்கு 19.09.2006 ஆம் நாள் நகர்மன்றத் தீர்மானம் எண்.1406–ல் ரூ. 60,000/– உத்தேச செலவினத்தில் செய்ய மன்றம் அனுமதியளித்துள்ளது.

இந்நிலையில் 20.09.2006 அன்று தேர்தல் அறிவிப்பு வெளியானதால் விலைப்புள்ளி எதுவும் கோரப்படாமல் கோப்பு நிலுவையில் வைக்கப்பட்டது. தற்பொழுது 45 தினங்களுக்குப் பின் முறையாக விலைப்புள்ளிகள் பெற்று ஜே.சி.பி. இயந்திரம் மூலம் அள்ளி டிராக்டரில் ஏற்றி வெளியில் கொண்டு சென்று குப்பைகளை குவிக்கப்பட்டது. ஏற்கனவெ அதாவது 1½ மாதங்களுக்கு முன் குப்பைகளை அள்ளுவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ. 60,000/– என்று கணக்கிடப்பட்டு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டது ஏறத்தாழ 1½ மாதங்கள் கழித்து மேற்கண்ட வேலையை செய்து முடித்த போது 1½ மாதத்தில் சேகரம் செய்யப்பட்ட குப்பையையும் சேர்த்து அப்புறப்படுத்தியதால் அதற்கான செலவினம் ரூ.82,300/–ஆகியுள்ளது. உத்தேச மதிப்பீட்டை விட கூடுதலாகியுள்ள செலவினம் ரூ.22,300/– க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அ.குறிப்பு :** அவசர அவசியம் கருதி நகராட்சி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகராட்சி மன்றத்தலைவர் அவர்களின் ஒப்புதல் பெற்று பணி மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 9 – அலுவலக குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்:10</u>

இந்நகராட்சியில் உதவி திட்ட அமைப்பாளர் பணியிடம் 12.01.2001 முதல் காலியாக உள்ளதால் அலுவலக பணிகள் பாதிக்கப்படாமல் இருக்க தற்காலிக அடிப்படையில் கணனி இயக்கம் மற்றும் கணனி சேவை பணிகளை செய்வதற்கு உள்ளூர் கணனி மையத்தின் மூலமாக 01.12.2006 முதல் 89 நாட்களுக்கு பணி நியமனம் செய்யவும் அதற்கான உத்தேச செலவு ரூ. 14000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 10 – அலுவலக குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்:11</u>

குளச்சல் நகராட்சி சொர்ண ஜெயந்தி சகாரி ரோஜ்கார் யோஜனா திட்டத்தின்கீழ் அண்ணாசிலை சமீபத்தில் 3 கடைகள் கட்டப்பட்டு கடை எண். 3 – ஐ சிறு தொழில் செய்வதற்காக லெட்சுமி குழுவிற்கு கொடுக்கப்பட்டது. மின்சார வசதி இல்லாததால் மனுதார் ஆணையர் பெயரில் மின்சார வைப்புத் தொகை ரூ. 2500/– மின்சார வாரியத்திற்கு செலுத்தி மின் இணைப்பு பெற்றுள்ளார். மேற்படி தொகையினை திரும்ப வழங்க கேட்டுள்ளார். மேற்படி தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.குறிப்பு</u> : மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 11 – அலுவலக குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்:12</u>**

இந்நகராட்சியில் பணிபுரியும் கீழ்கண்ட பணியாளர்கள் அலுவலக விசயமாக பயணம் மேற்கொண்ட வகையில் பயணப்படி வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | பணியாளர் மற்றும் பதவி | மாதம் | தொகை |
|---|---|---|---|
| 1. | திரு.பி. மாரியப்பன், பொறியாளர் | 11/2006 | 2160/– |
| 2 | திருமதி. எஸ். சுதா, நகரமைப்பு ஆய்வாளர் | 9/2006<br>10/2006 | 414/–<br>207/– |
| 3 | திருமதி.அ.நிர்மலா ஜாய், இளநிலை உதவியாளர் | 9/2006 | 172/– |
| 4 | திரு.எஸ்.ஜே.இராஜ்குமார், இ. நி. உதவியாளர் | 9/2006 | 846/– |
| 5 | திரு.ஆர்.தங்கராஜ். அ.உதவியாளர் | 9/2006<br>10/2006 | 617/–<br>634/– |
| 6 | திருமதி.கே.மீனாம்பாள், மகப்பேறு ஆயா | 8/2006<br>9/2006 | 188/–<br>282/– |

**அ.குறிப்பு** : அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 12 – அலுவலக குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்:13</u>**

இந்நகராட்சியில் சுனாமி திட்டப்பிரிவில் பணிபுரியும் கீழ்கண்ட பணியாளர்கள் அலுவலக விசயமாக பயணம் மேற்கொண்ட வகையில் பயணப்படி வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | பணியாளர் மற்றும் பதவி | மாதம் | தொகை |
|---|---|---|---|
| 1 | திரு. வரதன், சுனாமி கண்சல்ட்டன்ட் | 6/2006<br>7/2006<br>8/2006 | 1273/–<br>1873/–<br>2946/– |
| 2 | திருமதி. டி.எஸ். ஷோபா, பணி ஆய்வர் | 9/2006<br>10/2006 | 676/–<br>784/– |
| 3 | திருமதி.எம். சாந்தி, சமுதாய அமைப்பாளர் | 9/2006<br>10/2006 | 784/–<br>784/– |

**அ.குறிப்பு** : நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெற்ற பின்பு சுனாமி ஒதுக்கீட்டு நிதியில் தொகை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 13 – அலுவலக குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 14</u>**

இந்நகராட்சியில் துப்புரவு அலுவலராக பணிபுரிந்து ஓய்வுபெற்ற திரு,ஜோன்ஸ் சோபிதராஜ் தனக்கு வழங்க வேண்டிய பணபலன்கள் வழங்குவது குறித்து உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண். 19194/05–ன்படி வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கிற்கு செலவுத் தொகையாக ரூ. 5000/– வழங்க வழக்கறிஞர் திரு. சிவசண்முக சுந்தரம் கேட்டுள்ளார். மேற்படி தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.குறிப்பு</u> : மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 14 – அலுவலக குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்: 15</u>**

குளச்சல் நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் லாரி எண்:TN74Z-5304–ல் உள்ள பேட்டரி பழுதடைந்துள்ளதால் அதனை மாற்றி புதிய பேட்டரி வாங்க உத்தேச செலவுத் தொகை ரூ.4000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு :</u>** அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பேட்டரி வாங்கியதையும், செலவினத்தை நகராட்சி சட்டவிதி 15–ன் கீழ் மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 15 – அலுவலக குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்: 16</u>**

குளச்சல் நகராட்சிக்கு சொந்தமான நகராட்சி அலுவலக கட்டிடங்களுக்கு வர்ணம் பூசுதல், கதவு மற்றும் சன்னல்களுக்கு வர்ணம் பூசுதல் (Painting, Whitewash) மற்றுமுள்ள மராமத்துப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு ஏறத்தாழ 3 வருடங்கள் கடந்து விட்டதால் மேற்படி கட்டிடங்கள் மற்றும் கதவு சன்னல்களுக்கு வர்ணம் பூசுதல் பெயின்ட் அடிப்பதற்கான உத்தேச செலவு ரூ. 75,000/– க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**<u>அ.குறிப்பு :</u>** அவசர அவசியத்தின் பேரில் நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும், அதற்கான செலவினத்தை நகராட்சி சட்டவிதி 15–ன் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 16 – அலுவலக குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்: 17</u>**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட ஈழக்காணி விளைப் பகுதியில் சாலைக்கு இடஞ்சலாக நிற்கும் மின்கம்பத்தை மாற்றி அமைக்க சம்மந்தப்பட்ட பகுதி மக்கள் கோரியதன் பேரில் இளநிலை மின் பொறியாளர், தமிழ்நாடு மின்சாரவாரியம், குளச்சல் அவர்களிடமிருந்து மின்கம்பத்தை மாற்றுவதற்கான கட்டணமாக ரூ. 10,545/– செலுத்தக் கேட்டு கடிதம் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி தொகை செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு :</u>** அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 17 – அலுவலக குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்:18</u>**

<u>குளச்சல் நகராட்சி மன்றத்தின் 1–ம் வார்டு நகராட்சி மன்ற உறுப்பினர் கொண்டுவரும் தீர்மானம்</u>

1. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட குளச்சல் முதல் திக்கணங்கோடு சாலையில் வெள்ளியாகுளம் வரைக்கும் உள்ள இரு ஓரங்களிலும் மழைநீர் வடிகால் கட்டி தரவேண்டும் என தீர்மானிக்க கேட்டுக் கொள்கிறேன்.
2. குளச்சல் நகராட்சி எல்லைக்குட்பட்ட சாஸ்தான்கரை பகுதியில் தமிழக அரசு போக்குவரத்து கழகத்தின் பணிமனை அமைந்துள்ளது. இதனால் குளச்சல் திக்கணங்கோடு சாலையில் போக்குவரத்து சாலையில் நெரிசலாக உள்ளது. இதனால் சாலையின் இரண்டு பக்கங்களிலும் ஒரு மீட்டர் வீதம் சாலையை விரிவுப்படுத்தி

போக்குவரத்து நெரிசலை தவிர்த்து பொது மக்களுக்கு உதவ அரசை கேட்டு தீர்மானிக்க கேட்டுக் கொள்கிறேன்.

3. குளச்சல் நகராட்சி சாஸ்தான்கரை அங்கன்வாடி மையத்தில் தேவையான தண்ணீர் கிடைக்காததால் ஒரு பைப் வசதி செய்து தரும்படியும், மின்சாரம் இல்லாததால் மின்சார இணைப்பு செய்து தரும்படியும், சமையல் அறை உள்பக்கம் சமையல் பண்ணுவதால் குழந்தைகளுக்கு புகைமூட்டம் இருப்பதால் வெளிப்பக்கம் ஒரு சமையல் அறை கட்டி தரும்படிம் மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண்.18—ன் துணைப்பொருள் அனைத்தையும் ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்:19</u>**

<u>குளச்சல் நகராட்சி மன்றத்தின் 17—ம் வார்டு நகராட்சி மன்ற உறுப்பினர் கொண்டுவரும் தீர்மானம்</u>

(1) குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பள்ளிவிளாகம், களிமார், கணியாக்குடி செல்லும் சாலையில் 3 மின் கம்பங்கள் அமைத்து அதில் தெருவிளக்கு போடவும், களிமார் ஆற்று பாலத்தின் அருகில் ஒரு மின்கம்பம் அமைத்து தெருவிளக்கு போடவும், மின்கம்பம் எண். F-II/25, F-II/64, F-II/151 மற்றும் நரிக்கல் சிவன் கோவில் பின்புறம் அமைந்துள்ள பகுதியில் வீட்டு எண். W 17-130/1 மற்றும் 26/56 வீட்டருகிலும் மூன்று மின்கம்பங்களிலும் தெருவிளக்கு இடவும் மன்றம் தீர்மானிக்கலாம்.

(2) களிமார் சிவன் கோவிலில் இருந்து உய்யாண்டிவிளை ஒற்றைப்பனைமூடு வரை பழுதடைந்து காணப்படும் கருங்கல் பதித்த நடைபாதையை சிமின்ட் சாலையாக மாற்றவும் கழிவுநீர் ஓடை அமைத்திடவும், சிலாப் போடவும் மன்றம் தீர்மானிக்கலாம்.

(3) ஆழகனார்கோட்டை விளையில் பழுதடைந்துள்ள நடை பாதையை சீரமைத்து அதில் கழிவுநீர் ஓடை அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

(4) பள்ளிவிளாகம் முதல் நரிக்கல் வரையில் புதியதாக சிமின்ட் சாலை அமைக்கவும் மன்றம் தீர்மானிக்கலாம்.

(5) உய்யாண்டிவிளை பகுதியில் பழுதடைந்து உபயோகமற்ற நிலையில் உள்ள கழிப்பிடத்தை சீரமைத்திட மன்றம் தீர்மானிக்கலாம்.

(6) மேலும் நமது நகராட்சி முத்திரை சின்னத்தை நகராட்சி அலுவலகத்தின் மேல் பகுதியில் பொருத்திட மன்றம் தீர்மானிக்கலாம்,

(7) குளச்சல் நகர வரைபடத்தை நகராட்சி அலுவலகத்தில் மக்கள் பார்வைக்கு வைத்திட மன்றம் தீர்மானிக்கலாம்.

(8) குளச்சல் நகராட்சிக்குட்பட்ட 17—ம் வார்டு பள்ளி விளாகம் முதல் கணியாக்குடி வரை உள்ள சாலையும் அப்பகுதியில் இருந்து கழிவு நீரோடை களிமார் கணியாக்குடி ஓடையில் இணைக்கும் பணி கழிந்த மன்றத்தால் தீர்மானிக்கப்பட்டு பணியும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஆனால் கழிவு நீரோடை பணியானது பாதியில் நிற்கின்றது இதனால் கழிவுநீர் நடைபாதை வழியாக செல்கிறது. இதனால் பொதுமக்கள் பெரும் அவதிக்குள்ளாகிறார்கள். எனவே மக்கள் நலன் கருதி மீதமுள்ள பகுதியிலும் கழிவு நீரோடை போட்டு அதை களிமார் கணியாக்குடி ஓடையில் இணைக்கவும், மேற்படி கழிவுநீர் ஓடை பகுதி முழுவதும் ஸ்லாப் போட்டு மூடவும் பணிகளை உடனே செய்து முடிக்கவும் மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண்.19–ன் துணைப்பொருள் அனைத்தையும் ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) ஜே. ஜேசையா,
தலைவர்
குளச்சல் நகராட்சி மன்றம்

(உண்மை நகல்)

ஆணையர் (பொ)
குளச்சல் நகராட்சி

<u>குளச்சல் நகராட்சி</u>

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் நவம்பர் திங்கள் 30–ம் நாள் வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்றது.

முன்னிலை : திரு.ஜே. ஜேசையா, பி.எஸ்ஸி.,டி.பி.எம்.,
நகராட்சி மன்றத் தலைவர்.

<u>பொருள்கள்</u>

**<u>பொருள் எண்:1</u>**

2004 டிசம்பர் திங்கள் 26–ம் நாள் நடந்த சுனாமி பேரழிவினால் பாதிக்கப்பட்டுள்ள குளச்சல் நகர பகுதிகளுக்கு நிவாரணப் பணிகள் மேற்கொள்ள அரசாணை எண். 599 நாள்:24.10.2005 –ன்படி குளச்சல் நகராட்சிக்கு அரசு ரூ. 509.89 இலட்சம் அனுமதி வழஙகியுள்ளது. இதில் ரூ. 486.00 இலட்சத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள 16 வேலைகள் தேர்வு செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டு O.S.D. அலுவலக கடிதம் எண்: T.R.R.E.A.P/2/876/2006 நாள்: 17.04.2006–ன்படி அனுமதி பெறப்பட்டு 06.06.2006–ம் நாள் நகராட்சி மன்றத்தில் சாதாரணக்கூட்டத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டது. இதில் ரூ. 373.50 இலட்சஙகளுக்கு மட்டும் தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்ட வேலைகளுக்கு 03.05.2006, 23.08.2006, 25,08,2006 மற்றும் 19.09.2006 ஆகிய தேதிகளில் டெண்டர் வரவழைக்கப்பட்டு மதிப்பீடு அறிக்கை நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டது. மேற்படி வேலைகளில் ஒரு வேலைக்கு (வரிசை எண். 11) வேலை உத்தரவு 31.07.2006–ல் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது மேலும் ஒன்பது ஒப்பந்தப் பணிகளுக்கு (வரிசை எண், 1 முதல் 9 வரை) பார்வையில் கண்டுள்ள கடிதத்தின்படி மதிப்பீடு அறிக்கை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் ஒப்புதல் வழங்கப்பட்டு மதிப்பீடு விலை விகிதத்தைவிட (அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு) குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

| வ.எண். | பேக்கேஜ் எண். | பணியின் பெயர் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்தக்காரர் | மதிப்பீடு விலை விகிதம் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | TNMA/WS/012/ TEAP/001 | கொட்டில்பாடு மற்றும் அதை சார்ந்த பகுதிகளில் 90 எம்.எம்.மற்றும் 110 எம்.எம். பிவிசி பைப் லைன் பழுதடைந்ததை மாற்றி அமைத்தல். | திருT.ராதா கிருஷ்ணன் | 0.06% குறைவு | 30.00 |
| 2 | TNMA/WS/012/ TEAP/002 | கொட்டில்பாடு முதல் துறைமுகத்தெரு வரை எல்லா கழிப்பிடங்களுக்கும் தண்ணீர் வசதி செய்தல் மற்றும் துறைமுகத்தெருவில் பழுதடைந்த 90 எம்.எம். மற்றும் 110 எம்.எம். பிவிசி பைப் லைன் மாற்றி அமைத்தல். | திருT.ராதா கிருஷ்ணன் | 0.15 % குறைவு | 30.00 |
| 3 | TNMA/RD/012/ TEAP/005 | சிங்காரவேலன் காலனி, மரமடி, யேசுதாஸ்காலனி,சாம்பசிவபுரம் முதலிய பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிமெண்ட் தளம் அமைத்தல். | திருP.ஆரோக்கிய தாஸ் | 0.03% குறைவு | 37.50 |
| 4 | TNMA/RD/012/ TEAP/009 | சாம்பசிவபுரம் முதல் கொட்டில்பாடு வரை 4 இடங்களில் சிறுபாலம் அமைத்தல் மற்றும் சைமன்காலனி , வாய்க்கால் தெரு முதலிய தெருக்களில் சிமெண்ட் தளம் மற்றும் மழைநீர்வடிகால் அமைத்தல். | திருC.சிவதாணு மாலையன் | 0.01 % குறைவு | 37.50 |
| 5 | TNMA/RD/012/ TEAP/010 | துறைமுகத்தெரு 3–ல் சிமெண்ட் தளம் மற்றம் மழைநீர் வடிகால் அமைத்தல் மற்றும் ஆஸாத் நகர், வில்லேஜ் ஆபீஸ் ரோடு, ஆசாரிமார் தெரு, மலிக்காகிணறு முதலிய தெருக்களில் தார்தளம், மழைநீர் வடிகால் மற்றம் சிமெண்ட் தளம் அமைத்தல் | திருG..முருகன் | 0.10% குறைவு | 37.50 |
| 6 | TNMA/RD/012/ TEAP/011 | துறைமுகத்தெரு– 2–ல் சிமெண்ட் தளம் மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல். | திரு. இருதயதாசன் | 0.04 % குறைவு | 25.00 |
| 7 | TNMA/RD/012/ TEAP/012 | துறைமுகத்தெரு– 3 பகுதியில் சிமெண்ட் தளம் மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல். | திரு. இருதயதாசன் | 0.04 % குறைவு | 25.00 |
| 8 | TNMA/RD/012/ TEAP/014 | சிங்காரவேலன் காலனி முதல் கொட்டில்பாடு வரை மழைநீர் வடிகால் மற்றும் கவரிங் சிலாப் அமைத்தல். | திரு. இருதயதாசன் | 0.02 % குறைவு | 25.00 |
| 9 | TNMA/RD/012/ TEAP/015 | களிமார், பந்தவிளை பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிமெண்ட் தளம் அமைத்தல் மற்றும் காந்தி ஜங்சன் முதல் துறைமுகத்தெரு வரை வடிகால் அமைத்தல். | திருC.தேவஹரின் சாம் | 11.58 % கூடுதல் | 25.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 10 | TNMA/SN/012/ TEAP/003 | கொட்டில்பாடு மற்றும் சாம்பசிவபுரத்தில் 2 எண்ணம் பழுதடைந்த வாம்பே மாடல் கழிப்பிடத்தை இடித்து அப்புறப்படுத்தி விட்டு புதிய நவீன கழிப்பிடம் அமைத்தல். கொட்டில்பாடு மற்றும் மரமடியில் 3 எண்ணம் பழுதடைந்துள்ள நவீன கழிப்பிடத்தை அப்புறப்படுத்தி விட்டு புதிய நவீன கழிப்பிடம் அமைத்தல். துறைமுகத்தெருவில் ஏற்கனவே பழுதடைந்துள்ள கழிப்பிடத்தை அப்புறப்படுத்தி விட்டு புதிய 3 நவீன கழிப்பிடம் அமைத்தல். | | | 37.00 |
| 11 | TNMA/PB/012/ TEAP/004 | துறைமுகத்தெரு சர்ச் வளாகம் மற்றும் துறைமுக குறுக்குத் தெருவில் இருக்கும் பழுதடைந்துள்ள சத்துணவுக்கூடத்தை இடித்து அப்புறப்படுத்தி விட்டு புதிய 2 எண்ணம் சத்துணவுக்கூடம் அமைத்தல். | | | 11.00 |
| 12 | TNMA/RD/012/ TEAP/006 | ஜோசப் பெனடிக்ட் காலனி மற்றும் அந்தோணியார் காலனியில் பழுதனைந்துள்ள கழிவுநீர் ஓடை இடித்து அப்புறப்படுத்தி விட்டு புதிய கழிவுநீர் ஓடை மற்றும் சிமெண்ட் தளம் அமைத்தல். கொட்டில்பாடு பகுதியில் பழுதடைந்துள்ள கழிவுநீர் ஓடையை இடித்து அப்புறப்படுத்தி விட்டு புதிய கழிவுநீர் ஓடை மற்றும் சிமெண்ட் தளம் அமைத்தல். | | | 37.50 |
| 13 | TNMA/RD/012/ TEAP/007 | ஆசாரிமார் தெருவில் பழுதடைந்துள்ள கழிவுநீர் ஓடையை இடித்து அப்புறப்படுத்தி விட்டு புதிய கழிவுநீர் ஓடை மற்றும் சிமெண்ட் தளம் அமைத்தல். மாதாகாலனியில் பழுதடைந்துள்ள கழிவுநீர் ஓடையை இடித்து அப்புறப்படுத்தி விட்டு புதிய கழிவுநீர் ஓடை மற்றும் சிமெண்ட் தளம் அமைத்தல். துறைமுகத்தெரு, களிமார், மாதாகாலனி பகுதிகளில் தார்தளம் அமைத்து கழிவுநீர் ஓடை அமைத்தல். | | | 37.50 |
| 14 | TNMA/RD/012/ TEAP/008 | ஏசுதாஸ் காலனி மற்றும் சிங்காரவேலன் காலனியில் பழுதடைந்துள்ள கழிவுநீர் ஓடையை இடித்து அப்புறப்படுத்தி புதிய கழிவுநீர் ஓடை அமைத்தல். | | | 37.50 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 15 | TNMA/RD/012/ TEAP/013 | வாய்க்கால் தெரு முதல் களிமார் பாலம் வரை பழுதடைந்துள்ள அருகு சுவர் சரி செய்து தார்தளம் அமைத்தல். | | | 25.00 |
| 16 | TNMA/RD/012/ TEAP/016 | சைமன்காலனி பாலம் முதல் வாய்க்கால் தெரு வரை பழுதடைந்துள்ள அருகுசுவர் சரி செய்து தார்தளம் அமைத்தல். | | | 25.00 |

மேற்கண்ட பணிகளில் வரிசை எண். 1 முதல் 9 வரை உள்ள பணிகளுக்கு வேலை உத்தரவு வழங்குவது சம்மந்தமாக விபரம் மன்றத்தின் பார்வைக்கு.

**தீர்மானம் எண்.20**

2004 டிசம்பர் திங்கள் 26–ம் நாள் குளச்சல் நகரில் ஏற்பட்ட சுனாமி பேரழிவினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மிக அவசரமானதும், அத்தியாவசியமானதுமான, வேலைகள் செய்யப்பட வேண்டியதுள்ளதால், தேர்வு செய்யப்பட்ட மேற்படி 16 வேலைகளையும், ரத்து செய்து விட்டு, மேலே குறிப்பிட்டது போல் மிக அவசியமானதும், அத்தியாவசியமானதுமான வேலைகளை தேர்வு செய்திட தீர்மானிக்கப்பட்டது.

(ஒம்) ஜே. ஜேசையா,
தலைவர்
குளச்சல் நகராட்சி மன்றம்

(உண்மை நகல்)

ஆணையர் (பொ)
குளச்சல் நகராட்சி